மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்புமிகு உறுப்பினர்கள் எனக்குத் தந்திருக்கிற அந்தச் செய்தி அதிர்ச்சியா, இனப அதிர்ச்சியா என்பது எனக்கு விளங்கவில்லை. (சிரிப்பு).

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவரவர்களே, பேரவைத் தலைவர் பதவியைவிட அமைச்சர் பதவி உயர்ந்தது என்ற தவறான கருத்தை இந்தக் கருத்து மூலமாக எழுப்பியிருப்பதனால் தாங்கள் அதை மறுப்பீர்கள் என்று நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருந்தாலும் நான் அப்படிப்பட்ட ஒரு சிறப்பான பதவி அடைந்தால் வரவேற்பு விழாவில் வந்து வாழ்த்துவதற்குத் தயாராக இருக்கிற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களையும் நான் நெஞ்சார வாழ்த்துகிறேன். எப்போது எந்த நிகழ்ச்சி நடந்தாலும் தொடர்ந்து நீங்கள் என்னை வாழ்த்திக்கொண்டிருக்க வேண்டுமென்று கூறி, உங்களுக்கு நன்றி தெரிவித்து, இப்போது நாம் அடுத்த அலுவலுக்குப் போகிறோம்.

2. அவையில் நடைபெற்ற முன்னைய நிகழ்ச்சிகள் குறித்த பிரச்சினை.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்குத் தொல்லை தருவதற்காக வருந்துகிறேன் என்றாலும் சட்டமன்றத்திலே 25-ம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சிகளை ஒட்டி ... .

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவரவர்களே, இது திட்டமிட்டுப் பேசப்படுகிற பேச்சு. அவைக் குறிப்பில் இது ஏறக்கூடாது என்று தங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே, 25-ம் தேதி நடைபெற்ற எந்த நிகழ்ச்சி பற்றியும் அவையில் தொடர்ந்து உரையாடக் கூடாது என்று நான் தெரிவித்திருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எப்போதுமே பேரவைத் தலைவரின் தீர்ப்புக்கு மிகவும் மதிப்பளிப்பவர்கள். எனவே, அவர்கள் ஒவ்வொரு நாளும் பிரச்சினையை எழுப்புவதும் நான் என்னுடைய தீர்ப்பை மீண்டும், மீண்டும், மீண்டும் என்று சொல்வதும், '' கிடக்கிறதெல்லாம் கிடக்கட்டும் ; கிழவியைத் தூக்கி மணையில் வை '' என்பதைப்போல இருக்கக்கூடாது என்பது என்னுடைய அன்பான வேண்டுகோள். (சிரிப்பு)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இதை நான் வன்மையாக மறுக்கிறேன் என்று சொல்ல இயலாது. ஏனென்றால் தாங்கள் அவைத் தலைவர். இருந்தாலும் கிழவியைப் பற்றி இந்த அளவுக்குத் தரக் குறைவாகப் பேசுவதாகக் கிழவிகள் யாரும் கருதிக் கொள்ளக் கூடாது. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய முன்னோர் பழமொழிகள் எவையும் தரக்குறைவானவை அல்ல. அது ஒரு செய்தி. கிழவிகளை மணையில் தூக்கி வைக்கக்கூடாது என்பதே தவிர கிழவிகளுக்கு என்றைக்கும் மதிப்பு உண்டு. (சிரிப்பு)

திரு. கே. ரமணி : தலைவரவர்களே, அப்படிப்பட்ட சொல் அவைக் குறிப்பில் இருப்பது ஆரோக்கியமானது அல்ல என்று நாங்கள் கருதுகிறோம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதை நான் முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்கிறேன். ஏனென்றால் இந்தச் செய்தி வெளியே வந்தால் உங்கள் வீட்டிலே கூட மாலையில் ஏதாவது தகராறு ஏற்படலாம். (பலத்த சிரிப்பு). (குறுக்கீடு) கிழவி இல்லையா அங்கே !

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்ல வேளையாக இன்றைக்கு எனக்கு அந்த வாய்ப்பு இல்லை. (பலத்த சிரிப்பு) இன்றைக்கு அவர்கள் ஊரில் இருக்கிறார்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : 56 வயதான கிழவி நான் இருக்கிறேன். (சிரிப்பு)

திரு. எஸ். திருநாவுக்கரசு : அக்காள் கோபிக்கிறார்கள் ; அக்காள் வருத்தப்படுகிறார்கள். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறிப்பாக ஔவைக் கிழவிகளை...... (சிரிப்பு)

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்களிடத்தில் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் கிழவிகளா அல்லது வயது குறைவானவர்களா என்பது பிரச்சினை அல்ல. பெண்களின் பால் இப்படிப்பட்ட வார்த்தையை நாம் இங்கே பேசி, அது அவைக்குறிப்பில் இருப்பது நமக்கு ஆரோக்கியமல்ல. எனவே பழமொழிகளைச் சொல்வது அவைக்குறிப்பில் இல்லாமல் இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. பழமொழி இது. ஏற்கெனவே நம்முடைய தீர்ப்புகள் இருக்கின்றன. முன்னோர்கள் சொன்ன பழமொழிகள் எல்லாமே முறையானவைதான். அதில் முறைகேடு எதுவும் இல்லை.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, அவைக் குறிப்பில் இதை இங்கே ஏற்றி வைக்க முடியாது. சில சங்கடங்கள் இருக்கின்றன. எனவே தயவுசெய்து அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுவது நல்லது என்று திரும்பவும் உங்களை நான் மிகவும் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ரமணி அவர்களே, இதில் முறைகேடான சொற்றொடர்கள் எதுவுமில்லை. இது ஒரு பழமொழி, தொன்மை பெற்ற ஒரு பழமொழி. ''கிடக்கிறதெல்லாம் கிடக்கட்டும் கிழவியைத் தூக்கி மணையில் வை'' என்பது தமிழ்க்குடிமகன் சொன்ன மொழி அல்ல.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திருப்பி அவற்றைச் சொன்னாலும் நீங்கள் நீக்கத்தான் போகிறீர்கள். இருந்தாலும் வெளியேயும், உள்ளேயும் நடந்த அந்தக் காரியங்கள் குறித்த எங்களுடைய மூன்று கோரிக்கைகளை மீண்டும் வலியுறுத்தி அவற்றுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டு, உங்களிடத்திலும் நீங்கள் பரிகாரம் காண வேண்டும் என்று கேட்டு அதையொட்டி நாங்கள் பரிகாரம் கிடைக்குமா என்று எதிர்பார்க்கிறோம். கிடைத்தால் உட்காருகிறோம்; இல்லை என்றால் வெளிநடப்புச் செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மீண்டும், மீண்டும் தீர்ப்புகளைச் சொல்வது ஒரு பேரவைத் தலைவருக்கு அழகல்ல. என்னுடைய தீர்ப்பு அப்படியே இருக்கிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : எனவே இதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

திரு. சி. கோவிந்தராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, 7-வது நாளாக வெளிநடப்புச் செய்கிறார்கள் என்று பத்திரிகையில் வரவேண்டும் என்பதற்காக இப்படிச் செய்யப்படுகிறது. தினசரி இந்த நாடகம் நடந்து கொண்டிருக்கிறது.

1989 ஏப்ரல் 1] [திரு. சி. ஞானவிந்தராஜன்]

அவையினுடைய இதர அலுவல்கள் பூராவும் இப்படித்தான் தடை செய்யப்பட வேண்டுமா? இதற்குத் தொடர்ந்து நீங்கள் அனுமதி கொடுக்கப்போகிறீர்களா என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளிநடப்புச் செய்வதை நான் எப்படித் தடை செய்ய முடியும்?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்பை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக் கொள்ள முடியாமல் இருப்பதும் அவரவர்களுடைய நிலைமை. ஆனால் அவைக்குள் தங்கள் தீர்ப்பை எதிர்ப்பதாகவோ, கண்டிப்பதாகவோ கூறுவது அவை மரபல்ல. தங்கள் தீர்ப்பைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம் என்றுதான் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இனி ஒரு முறை அப்படிச் சொல்வதற்கு இடம் இல்லாத நிலையேற்பட வேண்டும். தங்களுடைய தீர்ப்பைப் பற்றி விமர்சிக்கிற உரிமை யாருக்கும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே பாராளுமன்றத்திலும், வேறு சட்டமன்றங்களிலும் இது பற்றிய தெளிவான தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. பேரவைத் தலைவருடைய தீர்ப்புகளைக் கண்டித்தோ அல்லது உள்நோக்கம் கற்பித்தோ, களங்கம் கற்பித்தோ நடந்து கொண்டால் அவ்வுறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேற்றப்பட நேரிடும் என்பதுதான் தீர்ப்பு. எனவே எல்லா உறுப்பினர்களும் இதைக் கவனமாக வைத்துக் கொள்ள வேண்டும். பேரவைத் தலைவர் என்றைக்காவது ஒரு நாள் அப்படிச் செயல்படுவது தவிர்க்க முடியாமல் ஆகிவிடும் என்பதை அனைவருக்கும் உணர்த்த விரும்புகிறேன்.

1. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்ற செய்திகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பியது குறித்து.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள்தோறும் பத்திரிகைகள் இதற்குத் தான் முக்கியத்துவம் கொடுக்கின்றன. பேசுபவர்களைப் பற்றிப் பத்திரிகைகளிலே வரவில்லை. நேற்று நான் டி.வி. செய்தியைக் கேட்டேன். 8.40-க்கு, 'பட்ஜெட் பொது விவாதம் நடந்தது.' அவ்வளவுதான். யார், யார் பேசினார்கள் என்று பெயர்களைச் சொல்லவில்லை. ஆனால் வெளி